**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்**: 338 **நாள்**:28.07.2026

**வெப்ப அபாய மேலாண்மை தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பிலும், ஆற்றல், சுற்றுச்சூழல், மற்றும் நீர் கவுன்சில் (CEEW) சார்பிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பட்டது.**

இன்று (28.07.2026) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், கிண்டியில் உள்ள ஐடிசி கிராண்ட் சோழா கூட்டரங்கில் நடைபெற்ற வெப்ப அபாய மேலாண்மை பயிலரங்கில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் முன்னிலையில், சென்னையில் வெப்பத்தால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வார்டுகளில், கடும் வெப்பத்தைச் சமாளிப்பதற்கான ஆயத்த நிலையை வலுப்படுத்தவும், அதன் தாக்கத்தைக் குறைக்கவும் விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மைப் பிரிவை அமைப்பதற்காகவும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பிலும், ஆற்றல், சுற்றுச்சூழல், மற்றும் நீர் கவுன்சில் (CEEW -- Council on Energy, Environment and Water ) சார்பிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம், சென்னை நகரில் உள்ள பாதிப்புக்குள்ளாகக்கூடிய வார்டுகள் மற்றும் வெப்ப அபாய மண்டலங்களில் கடும் வெப்பத்தை எதிர்கொள்வதற்கான தயார்நிலையையும், மீள்திறனையும் வலுப்படுத்துவதாகும். இதை அடைவதற்காக, ஆற்றல், சுற்றுச்சூழல், மற்றும் நீர் கவுன்சில் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவை தங்களின் பலங்களை ஒன்றிணைத்து, முன்னுரிமை அளிக்கப்பட்ட வெப்ப மீள்திறன் திட்டங்களை அடையாளம் காணுதல், வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மற்றும் ஆதரவிற்கான திட்ட மேலாண் அலகை (PMU) நிறுவுதல் மற்றும் இயக்குதல். விரிவாக்கக்கூடிய குளிரூட்டும் தீர்வுகள், வெப்பத் தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் காலநிலைக்கேற்ற உள்கட்டமைப்பு உள்ளிட்ட, அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வெப்பத் தணிப்புத் தலையீடுகளை ஜிசிசி-யால் கட்டம் கட்டமாகச் செயல்படுத்துவதற்காக அடையாளம் கண்டு முன்னுரிமை அளித்தல். திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, திட்ட முன்மொழிவுகள், தொழில்நுட்ப வடிவமைப்புகள் மற்றும் விரிவான திட்ட

அறிக்கைகளை (DPRs) உருவாக்குதல். பங்குதாரர் ஈடுபாடு, திறன் மேம்பாடு மற்றும் பொதுமக்களைச் சென்றடைவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட வெப்ப அபாய மேலாண்மை நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர் முனைவர் சே.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் திட்ட இயக்குநர்/ பேரிடர் மேலாண்மை ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திருமதி ப.காயத்ரி கிருஷ்ணன், இ.ஆ.ப., ஆற்றல், சுற்றுச்சூழல், நீர் கவுன்சிலின் குழுத் தலைவர் டாக்டர் விஷ்வாஸ் சித்தலே உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**